# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

### அ.சா. 14 (LW 24)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **Dr. தேவி பியான்சா** | **தொழில்** | **மருத்துவர்** |
| **க/ பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **12.02.2026** |

**காணொலி காட்சி மூலம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1,2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை மருத்துவ கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.05.2021 அன்று பகல் 01.05 மணிக்கு எரியோடு காவல்நிலைய காவல் ஆய்வாளர் கொடுத்தனுப்பிய வேண்டுகோள் கடிதத்தைப் பெற்று சுமார் 50 வயது மதிக்கத்தக்க பன்னீர்செல்வம் என்ற ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தேன். எரியோடு காவல் நிலைய குற்ற எண். 300/2021 இதச பிரிவுகள் 294(b), 323, 427.302 இதச வழக்கில் வேண்டுகோள் கடிதத்தை பெண் தலைமை காவலர் செல்வி. சவரியம்மாள் என்பவர் கொடுத்தார். அந்த வேண்டுகோள் கடிதம் **அ.த.சாஆ.8. ஆகும்.** பின்பு அவர் அடையாளம் காட்டிய பிரேதத்திற்கு பகல் 1.10 மணிக்கு பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது. அதில் சுமார் 50 வயது மதிக்கத்தக்க மிதமான ஊட்டத்துடன் கூடிய ஆண்பிரேதத்தில் பிணவிறைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. கை மற்றும் கால்விரல்களின் நகங்கள் நீல நிறத்தில் காணப்பட்டது.

**பிரேதத்தில் காணப்பட்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்களின் விவரங்கள் பின்வருமாறு**

1) 33 செமீ X 1 செமீ எலும்பு ஆழம் வரை எம் வடிவிலான அறுவை சிகிச்சை கொண்டு தையலிடப்பட்ட காயம் வலது பக்க பக்கவாட்டுப் பகுதியிலிருந்து இடது பக்க பக்கவாட்டுப் பகுதி வரை காணப்பட்டது.

2, 1 X 1 செமீ அளவில் வலது கால் முட்டியில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

3. பின் தலையின் மத்தியில் 3X 2 செமீ அளவில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

தலைப்பகுதியை கூராய்வு செய்த போது தலைத்தோளில் அடிப்புற பகுதி முழுவதும் கன்றிய காயம் காணப்பட்டது. இடது பக்க கபால எலும்பில் 12X 11 செமீ அளவில் எலும்பு பகுதி அறுவை சிகிச்சை கொண்டு நீக்கப்பட்டிருந்தது. வலது பக்க கபால எலும்பில் 14 X 10 செமீ அளவில் எலும்பு பகுதி அறுவை சிகிச்சை கொண்டு நீக்கப்பட்டிருந்தது. கபால எலும்பின் அடிப்பகுதியில் மத்தியில் இரண்டு பக்கமும் எலும்பு முறிவு காணப்பட்டது.

மார்பக அறை மற்றும் வயிற்றறை காலியாக இருந்தது. இருதய அறையில் 15 மிலி அளவிலான வைக்கோல் நிற திரவம் காணப்பட்டது. இருதயத்தின் வலது பகுதியில் நீர்த்த இரத்தமும் , இடது பகுதி காலியாக இருந்தது. இருதயத்தின் தமணிகள் முழுமையாக இருந்தது. இரத்தக்குழாய், மூச்சுக்குழாய், நாவடி எலும்பு , குரள் வளை போன்றவை முழுமையாக இருந்தது. இரு நுரையீல்கள் , இரு சிறுநீரகங்கள், கல்லீரல், மண்ணீரல், ஆகியவை வெட்டுத் தோற்றத்தில் இரத்த செரிவுடன் காணப்பட்டது. சுமார் 10 எம். எல் அளவிலான பழுப்பு நிற திரவம் கார நெடியுடன் வயிற்றில் காணப்பட்டது. முன் சிறுகுடலில் 10 எம்.எல் அளவிலான பித்தநிற திரவம் கார நெடியுடன் காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது.

மேற்கண்ட பிரேதத்திலிருந்து உடல் உள்ளுப்புகள் எடுக்கப்பட்டு இரசாயன பகுப்பாய்வுக்காக அனுப்பி அதன் முடிவுகள் பெறப்பட்டது.

**<u>கருத்து</u> --** மேற்கண்ட இறந்த நபர் அவருக்கு ஏற்பட்ட தலை மற்றும் மூளைக் காயங்களினால் பிரேத பரிசோதனை ஆரம்பித்த நேரத்திலிருந்து 8 லிருந்து 12 மணி நேரத்திற்குள்ளாக இறந்துள்ளார் என சான்றளித்துள்ளேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.9.ஆகும்.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

பிரேதத்தில் தலையின் உச்சிப்பகுதி மற்றும் முன்பகுதி , பக்க வாட்டுப்பகுதியில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு எலும்புகளும் எதற்காக நீக்கப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் எலும்பு முறிவு இருந்தாலோ, தலையில் அடிபட்டிருந்தாலோ, இரத்த கட்டு இருந்தாலோ அறுவை சிகிச்சை செய்வதற்காக எடுக்கப்பட்டிருக்கும். தலையின் இரண்டு பக்கங்களிலும் உச்சி முன் பகுதி பக்கவாட்டுப்பகுதி எலும்புகள் நீக்கட்டுள்ளது என்றால் சரிதான். ஆக்சிபிட்டல் எலும்பு நீக்கப்படவில்லை என்றால் சரிதான். ஆக்சிபிட்டல் பகுதியில் எந்த எலும்பு முறிவும் இல்லை என்றால் சரிதான். சாட்சி கன்றிய காயங்கள் இருந்ததாக சொல்கிறார். இறந்து போன நபருக்கு ஏற்பட்ட காயங்கள் தரையில் முன்பக்கமாக, வேகமாக விழும்போது ஏற்படக்கூடுமா என்றால் இல்லை. நான் மேற்சொன்ன காயங்கள் தரையில் விழுந்ததால் வர வாய்ப்புள்ளதா என்றால் இல்லை, கட்டையால் அடித்தார் ஒன்றுக்கு மேற்பட்ட முறை எல்லா இடங்களிலும் பலமாக அடிக்கும் போது வர வாய்ப்புண்டு. ஒருமுறை பலமாக கட்டையை வைத்து அடிக்கும்போது மேற்சொன்ன காயங்கள்வர வாய்ப்பில்லை. பலமுறை கட்டையால்தான் அடித்தால்தான் வர வாய்ப்புண்டு. வயிற்றில் 10 எம்.எல் காரநெடியுடன் கூடிய திரவம் என

குறிப்பிடப்பட்டுள்ளது ஆல்கஹால் இருக்க வாய்ப்புள்ளதா என்றால் பகுப்பாய்வுக்கு அனுப்பபட்ட போது ஆல்கஹால் இல்லை என அறிக்கை வந்தது. அறுவை சிகிச்சை செய்யும்போது எடுக்கப்பட்ட எலும்புகளை திரும்ப சேர்த்து வைக்கப்படவில்லை என்றால் சரிதான். எடுத்த எலும்புகளை திரும்ப வைக்காவிட்டால் மூளைக்கு ஆபத்து என்றால் சரியல்ல. இந்த அறுவை சிகிச்சையை பொறுத்த மட்டும் இன்பெக்சன் வர வாய்ப்புண்டா என்றால் முறையாக அறுவை சிகிச்சை செய்யும் பட்சத்தில் வர வாய்ப்பில்லை. முறையாக அறுவை சிகிச்சை செய்திருந்தால் மேற்படி நபர் இறந்திருக்க மாட்டார் என்றால் சரியல்ல. முறையான சிகிச்சை செய்தும் எதற்காக இறந்து போய்விட்டார் என்றால் தலை முழுவதும் ஏற்பட்ட காயத்தினாலும், மூளையில் ஏற்பட்ட காயத்தினாலும் இறந்து விட்டார். தலையில் ஏற்பட்ட காயத்திற்குத்தான் அறுவை சிகிச்சை செய்தார்கள் என்றால் சரிதான். அறுவை சிகிச்சையின் போது செரிப்ரோ ஸ்பைனல் புளூயிட் வெளியேறி மேற்படி நபர் இறந்து விட்டார் என்றால் அது போன்று நடந்திருந்தால் அதை மருத்துவர் சரி செய்திருப்பார்கள். நான் சொல்லியுள்ளMiddle cranial fossa எலும்பு முறிவு பிராக்சர் ஆகி உள்ளது என்பது கபால எலும்பின் நடுப்பகுதி என்றால் சரிதான். அறுவை சிகிச்சையின் போது அந்த எலும்பிற்கு சிகிச்சை கொடுக்கவில்லை என்றால் மூளையின் கீழ் பகுதியில் உள்ளதால் சிகிச்சை கொடுக்க வாய்ப்பில்லை. மேற்படி காயம் கட்டையால் ஓங்கி தாக்கும் போது ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புள்ளது.

**<u>நீதிமன்ற கேள்வி-</u>** ஒருவர் தலையை சுவற்றில் மோதும்போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் ஒரு முறை செய்தால் வர வாய்ப்பில்லை. ஒன்றுக்கும் மேற்பட்டமுறை தாக்கும் போது வர வாய்ப்புள்ளது.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:18:25 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.